# பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்படும் நெருப்பிலிருந்து வரும் சாம்பல்

## சமூக விபரத் தாள்

பழுப்பு நிலக்கரியில் ஏற்படும் நெருப்பிலிருந்து வரும் புகைக்கு ஆட்படக்குடிய உங்கள் ஆரோக்கியத்தையும், உங்கள் கவனிப்பிலுள்ள எவரின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க என்ன செய்ய வேண்டுமென்பதை நீங்கள் அறியும் விதமாக, Department of Health and Human Services ஆனது இந்தப் பொதுவான தகவலைத் தயாரித்துள்ளது.

குறிப்பான தீ அல்லது அவசரநிலைச் சம்பவம் பற்றிய தகவலுக்கு, அறிவித்தல்களைப் பெற உங்கள் உள்ளூர் அவசரநிலை வானொலி நிலையத்தைக் கேளுங்கள் அல்லது www.emergency.vic.gov.au என்ற இணையத்தளத்தைப் பாருங்கள்.

நீங்கள் அவசரநிலையான கட்டத்தில் இருந்தால், அம்புலன்ஸ் உத்தியோகத்தர்கள், காவல்துறை அல்லது தீயணைப்புச் சேவைகள் போன்ற அவசரநிலைச் சேவைகளின் வழிமுறைகளை எப்போதும் பின்பற்றுங்கள்.

VICTORIA State Government | Health and Human Services

## விக்ரோறியாவில், பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்படும் நெருப்பிலிருந்து வரும் சாம்பலைப் பற்றிய முக்கிய குறிப்புகள்

- பழுப்பு நிலக்கரி எரியும் போது சாம்பல் உருவாகிறது. சாம்பலில், ஒட்சைசைடுகளான கல்சியம், அலுமினியம், பொற்றாசியம், சோடியம், இரும்பு மற்றும் மக்னீசியம் சில நேரங்களில் கந்தக ஒட்சைடுகளும் உள்ளன.
- நெருப்புக்கு அருகிலுள்ள இடங்களிலிருந்து வரும் புகையில் சாம்பல் துகள்கள் இருக்கும். சாம்பல் என்பது ஒரு நுண் துகளாகும், அவற்றை மேற்பரப்புகளில் பார்க்கலாம்.
- உங்கள் நுரையீரல்களுக்குள் மூச்சை பெரிதாக இழுத்து விடும் போது, சாம்பல் துகள்களால் கண்கள், மூக்கு அல்லது தொண்டைக்கு உள்ளரிவு ஏற்படலாம். இந்த உடல்நல விளைவுகளை விரைவில் தீர்க்க வேண்டும். இல்லையென்றால்,NURSE-ON-CALL-ஐ 1300 60 60 24 என்ற இலக்கத்தில் அழையுங்கள் அல்லது மருத்துவ ஆலோசனையைப் பெறுங்கள்.

## விக்ரோறியாவில், பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்படும் நெருப்பிலிருந்து வரும் புகையைப் பற்றிய முக்கிய குறிப்புகள்

- பழுப்பு நிலக்கரிச் சுரங்க நெருப்பிலிருந்து வரும் புகையில் நுண் துகள்கள், நீராவி மற்றும் காபனோரொட்சைட், காபனீரொட்சைட் மற்றும் நைதரசன் ஒட்சைடுகள் போன்ற வாயுக்கள் உள்ளன.
- லாற்றோப் பள்ளத்தாக்குக்கு வெளியே நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்படும் நெருப்பிலிருந்து வரும் புகையானது கந்தக ஒட்சைடுகளைக் கொண்டிருக்கலாம்.
- நீங்கள் செய்ய வேண்டியவை பற்றிய ஒழுங்குமுறையான அறிவித்தல்களைப் பெற உங்கள் உள்ளூர் அவசரநிலை வானொலி நிலையத்தைக் கேளுங்கள் அல்லது www.emergency.vic.gov.au-ஐப் பாருங்கள்
- ஆஸ்த்மா போன்ற இதய அல்லது நுரையீரல் நோயுள்ளவர்கள், குழந்தைகள் (14 வயது வரை), கர்ப்பிணிகள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்தப் புகையைச் சுவாசிப்பதால் ஏற்படும் விளைவுகளால் அதிக இலகுவாகப் பாதிக்கப்படுவார்கள்.
- உங்களுக்கு இதய அல்லது நுரையீரல் நோய் இருந்தால், மருத்துவர் அறிவுறுத்தியவாறு உங்கள் மருந்தை எடுங்கள். ஆஸ்த்மா நோயாளிகள் தமது தனிப்பட்ட ஆஸ்த்மா செயல் திட்டத்தைப் பின்பற்ற வேண்டும், நிவாரணி மருந்தைக் கையிலேயே வைத்திருக்க வேண்டும்.
- புகைக்கு வெளிக்காட்டப்பட்டதால் உங்களுக்கு அல்லது உங்கள் கவனிப்பிலுள்ள எவருக்கும் அறிகுறிகள் ஏதும் ஏற்பட்டால், NURSE-ON-CALL-ஐ 1300 60 60 24 என்ற இலக்கத்தில் அழையுங்கள் அல்லது மருத்துவ ஆலோசனையைப் பெறுங்கள்.
- சுவாசிப்பதில் சிரமம், இழுப்பு அல்லது மார்பில் இறுக்கம் முதலியவை ஏற்படுகின்ற எவரும் உடனடி மருத்துவ உதவியை நாட வேண்டும் - இதற்காக 000-ஐ அழையுங்கள்.

## விக்ரோறியாவில் பழுப்பு நிலக்கரி பற்றி

நிலக்கரி என்பது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அடுக்குகளாக உள்ள தாவரப் பகுதிகளிலிருந்து உருவாக்கப்படுகிறது.

விக்ரோறியா பழுப்பு நிலக்கரியானது பொதுவாக அதிக அளவு தண்ணீர், குறைந்த அளவு கந்தகம் மற்றும் குறைந்த அளவுகளில் மாசுகளைக் கொண்டுள்ளது.

மற்ற நிலக்கரி வகைகளுடன் ஒப்பிடுகையில் விக்ரோறியா பழுப்பு நிலக்கரியானது எரியும் போது குறைவான சாம்பலை உருவாக்குகிறது.

லாற்றோப் பள்ளத்தாக்கு பழுப்பு நிலக்கரியில் மிகக் குறைந்த அளவு கந்தக உட்பொருள் உள்ளது (0.5% உலர் நிறையை விடக் குறைவு). ஏங்கலீசியா மற்றும் பாச்சுஸ் மார்ஷ் பழுப்பு நிலக்கரியில் (4% உலர் நிறை) கந்தகம் உள்ளது.

## பழுப்பு நிலக்கரி எரிவதால் வரும் புகையில் இருப்பது என்ன?

ஒவ்வொரு நிலக்கரிச் சுரங்கத்திலும் ஏற்படும் நெருப்பின் அளவு வேறுபடும், அது எவ்வளவு நேரம் எரியும், மேலும் அவற்றின் புகை அல்லது சாம்பல் உருவாக்கிய அளவும் வேறுபடும்.

சமூகத்தில் நிலக்கரி நெருப்பின் புகை அல்லது சாம்பலைப் பொறுத்தும், மேலும் வானிலை நிலைகளைப் பொறுத்தும் நெருப்பில் மக்கள் எவ்வளவு அருகே வாழலாம் அல்லது வேலை செய்யலாம் என்பது வேறுபடும்.

பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்படும் நெருப்பிலிருந்து வரும் புகை

- காற்றின் தரத்தைக் குறைக்கக் கூடியது, இதனால் மக்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கலாம்
- நுண் துணிக்கைகள், நீராவி, காபனோரொட்சைட், காபனீரொட்சைட் மற்றும் நைதரசனொட்சைடுகள் உட்பட்ட வாயுக்களைக் கொண்டிருக்கும், சில சந்தர்ப்பங்களில் கந்தக ஒட்சைடுகளைக் கொண்டிருக்கலாம்
- நுண் புகைத் துகள்களை விட இன்னும் அதிகமான துகள்களை சாம்பல் கொண்டிருக்கலாம்.

## பழுப்பு நிலக்கரிச் சாம்பலில் இருப்பது என்ன?

பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்படும் நெருப்பிலிருந்து வரும் சாம்பல்:

- வழக்கமாக புகை இருக்கும்
- பெரிய துகள்களால் ஆனது, அவை முழுவதுமாக எரிக்கப்படாததால் காற்றில் விழுந்து மேற்பரப்புகளில் நுண் துகள்களாக உள்ளது
- முக்கியமாக கல்சியம், அலுமினியம், பொற்றாசியம், சோடியம், இரும்பு மற்றும் மக்னீசியம் ஒட்சைடுகளைக் கொண்டுள்ளது
- எரியும் இடங்களில் காணப்படும் சாம்பலை ஒத்தது.

## பழுப்பு நிலக்கரி நெருப்பு எரிந்த பிறகு புகையால், என்னுடைய உடல்நலம் பாதிக்கப்படுமா?

புகை உடலில் படுவது உங்களுடைய உடல்நலத்தை எப்படிப் பாதிக்கும் என்பது உங்களுடைய வயது, உங்களுக்கு ஏற்கனவே நோய் உள்ளதா, புகையுள்ள நிலைமையில் எவ்வளவு சுறுசுறுப்பாக இயங்குகிறீர்கள்,

புகைக்கு எவ்வளவு காலம் ஆட்படுகிறீர்கள் முதலியவற்றைப் பொறுத்தது.

ஆஸ்த்மா போன்ற இதய அல்லது நுரையீரல் நோயுள்ளவர்கள், குழந்தைகள் (14 வயது வரை), கர்ப்பிணிகள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்தப் புகையைச் சுவாசிப்பதால் ஏற்படும் விளைவுகளால் அதிக இலகுவாகப் பாதிக்கப்படுவார்கள்.

உங்களுக்கு இதய அல்லது நுரையீரல் நோய் இருந்தால், உங்கள் மருத்துவர் அறிவுறுத்தியவாறு உங்கள் மருந்தை எடுங்கள்.

ஆஸ்த்மா நோயாளிகள் தமது தனிப்பட்ட ஆஸ்த்மா செயல் திட்டத்தைப் பின்பற்ற வேண்டும், நிவாரணி மருந்தைக் கையிலேயே வைத்திருக்க வேண்டும்.

புகைக்கு வெளிக்காட்டப்பட்டதால் உங்களுக்கு அல்லது உங்கள் கவனிப்பிலுள்ள எவருக்கும் அறிகுறிகள் ஏதும் ஏற்பட்டால், NURSE-ON-CALL-ஐ 1300 60 60 24 என்ற இலக்கத்தில் அழையுங்கள் அல்லது மருத்துவ ஆலோசனையைப் பெறுங்கள்.

யாருக்கேனும் மூச்சுத் திணறல் இருந்தால் அல்லது இழுப்பு அல்லது நெஞ்சிறுக்கம் ஏற்பட்டால் 000 என்ற இலக்கத்தை அழையுங்கள்.

## பழுப்பு நிலக்கரி நெருப்பு எரிந்த பிறகு சாம்பலால், என்னுடைய உடல்நலம் பாதிக்கப்படுமா?

நிலக்கரி சுரங்கத்தில் நெருப்பு எரியும் போது புகையும் சாம்பலும் உருவாகும்.

நுரையீரல்களுக்குள் மூச்சை பெரிதாக இழுத்து விடும் போது, புகையிலுள்ள சாம்பல் துகள்களால் கண்கள், மூக்கு அல்லது தொண்டைக்கு உள்ளரிவு ஏற்படலாம்.

இந்த விளைவுகள் விரைவாக தீர்க்கப்படவில்லையென்றால், சாம்பல் விழும் இடத்திலிருந்து வெளியே வந்தவுடன் மருத்துவ ஆலோசனையைப் பெறவும்.

## பழுப்பு நிலக்கரியில் நெருப்புப் பற்றும் போது எனது உடல்நலத்தைப் பாதுகாக்க என்ன செய்யலாம்?

### சாம்பல்

உங்கள் மீது சாம்பல் பட்டால், தேவைக்கேற்றவாறு உங்கள் கைகள், முகம் மற்றும் கழுத்தை நன்றாகக் கழுவவும். உங்கள் கண்களில் சாம்பல் உள்நுழைந்துவிட்டால், தூய்மையான தண்ணீரில் மெதுவாகக் கழுவவும்.

நல்ல சுகாதாரத்தை பயிற்சி செய்யுங்கள் - சவர்க்காரத்தையும் தண்ணீரையும் கொண்டு மேற்பரப்புகளைத் துடையுங்கள்.

### புகை

தீ ஏற்பட்டிருக்கும் போது, காற்றின் தரம் மற்றும் நீங்கள் செய்ய வேண்டியவை பற்றிய அறிவித்தல்களுக்கு உங்கள் உள்ளூர் அவசரநிலை வானொலி நிலையத்தைக் கேளுங்கள் அல்லது www.emergency.vic.gov.au ஐப் பாருங்கள்.

புகைசூழ்ந்த நிலைகளின் போது, உடலை வெளிக்காட்டியபடி செய்யும் உடற்பயிற்சி அல்லது கடினமான செயல்பாட்டைத் தவிர்க்கவும். ஏற்கனவே இதய அல்லது நுரையீரல் நோயுள்ளவர்கள், முடிந்தளவுக்கு ஓய்வாக இருக்க வேண்டும்.

உங்களுக்கு தீயால் அச்சுறுத்தல் இல்லை என்றால், புகையிலிருந்து விலகி உள்ளிடங்களிலேயே இருங்கள். யன்னல்களையும் கதவுகளையும் மூடியே வைத்திருங்கள்.

வெப்பமாக இருந்தால் மற்றும் உங்களுடைய இடத்தில் எயார் கொண்டிஷனர் இயங்கும் என்றால், அதை 'ரிசெர்குலேற்' அல்லது 'ரியூஸ் எயார்' என்ற நிலைக்கு இயக்கவும். இது உள்ளே வருகின்ற புகைத் துணிக்கைகளின் அளவைக் குறைக்கும்.

உங்களுடைய வீடு அசௌகரியமாக இருந்து, அங்கிருந்து வெளியேறுவது பாதுகாப்பாக இருந்தால், புகையிலிருந்து சிறிது காலம் விடுபட்டு இருப்பது பற்றி யோசியுங்கள். புகையால் பாதிக்கப்படாத ஒரு இடத்திற்குச் செல்லுங்கள் அல்லது நூலகம், சனசமூக நிலையம் அல்லது ஷொப்பிங் மையம் போன்ற உட்புறம் குளிரூட்டப்பட்டுள்ள கட்டடத்திற்குச் செல்லுங்கள்.

பக்கத்து வீடுகளில் உள்ள முதியவர்கள் அல்லது மேலதிக உதவி தேவைப்படலாம் என்று நீங்கள் நினைக்கின்ற மற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்ப்பது பாதுகாப்பானது என்றால், *அவ்வாறே செய்யுங்கள்.*

## முக மூடி அணிவது நல்லதா?

வெளியில் வேலை செய்வதை உங்களால் தவிர்க்க முடியாது என்றால் ஒழிய, புகையிலிருந்து விலகி உட்புறத்திலேயே இருப்பது நல்லது.

தூசிக்குப் பாவிக்கும் சாதாரண காகித முகமூடிகள், கைக்குட்டைகள் அல்லது பான்டனாக்களால் பெரிய சாம்பல் துணிக்கைகள் படுவதைக் குறைக்கக் கூடும், ஆனால் நுண்ணிய புகைத் துணிக்கைகள் அல்லது வாயுக்களிலிருந்து உங்களைப் பாதுகாக்க முடியாது.

நுண்ணிய புகைத் துணிக்கைகள் உட்சுவாசிக்கப்படுவதிலிருந்து சிறப்பான முக மூடிகள் (P2 முகமூடிகள்) சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

P2 முகமூடியைப் பாவிக்க முடிவு செய்யும் முன், இவற்றைக் கவனத்தில் கொள்க:

- அணிவதற்கு அவை வெக்கையாகவும் அசௌகரியமாகவும் இருக்கலாம் மற்றும் வழக்கம்போலச் சுவாசிக்க விடாமல் சிரமத்தை ஏற்படுத்தலாம்
- ஏற்கனவே இதய அல்லது நுரையீரல் நோயுள்ள எவரும் அதை உபயோகிக்கும் முன்னர் மருத்துவ ஆலோசனையை நாட வேண்டும்
- தாடி உள்ளவர்களுக்கு அவை இறுக்கமாக மூடிக் கொள்ளாது
- அவை குழந்தையின் முகத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்படவில்லை
- அவை காபனோரொட்சைட் போன்ற வாயுக்களிலிருந்து உங்களைப் பாதுகாக்காது.

## பழுப்பு நிலக்கரி நெருப்பு எரிந்த பிறகு சாம்பலால், என்னுடைய உடல்நலம் பாதிக்கப்படுமா?

நெருப்புப் அணையும் போது, நெருப்புக்கு அருகிலுள்ள இடங்களில் ஒரு நுண் துகள் போன்ற சாம்பலை மேற்பரப்புகளில் பார்க்கலாம்.

பொதுவாக, பழுப்பு நிலக்கரிச் சாம்பலானது மிகவும் அபாயகரமானது அல்ல என்றாலும் கூட, சாம்பலால் ஏற்படக்கூடிய சரும அல்லது கண் தொடர்பான மற்றும் சாத்தியமான எரிச்சலைத் தடுக்க அதை நன்றாகத் துடைப்பது முக்கியமாகும்.

## சாம்பலைத் துடைத்தல்

நல்ல சுகாதாரத்தை பயிற்சி செய்யுங்கள் - தண்ணீரைக் கொண்டு உள் மேற்பரப்புகளைத் துடையுங்கள். சாம்பல் கண்ணுக்குத் தெரிந்தால், சவர்க்காரம் மற்றும் தண்ணீரைக் கொண்டு துடைக்கவும்.

பகுதி சுத்தமாகும் வரை சாம்பல் அருகே சிறு பிள்ளைகள் விளையாடுவதைத் தவிர்க்கவும்.

சுத்தம் செய்யும் செயல்பாடுகளில் உள்ளூர் கவுன்சிலிடமிருந்து மேலதிகமான ஆலோசனையைப் பெறவும்.

## எனது செல்லப் பிராணிகளின் ஆரோக்கியம் பற்றிக் கவலைப்படுகிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?

புகைமூட்டமான நிலைமைகளிலும், செல்லப் பிராணிகளை உள்ளிடங்களில் வைத்திருப்பது நடைமுறைக்குச் சாத்தியமான போதும், அவ்வாறே செய்யுங்கள்.

உங்களுடைய செல்லப் பிராணிகளின் ஆரோக்கியம் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால், *உங்களுடைய உள்ளூர் மிருக வைத்தியரிடம் ஆலோசனை பெறுங்கள்.*

## எனது பிராணிகளின் ஆரோக்கியம் பற்றிக் கவலைப்படுகிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களுடைய பிராணிகளின் ஆரோக்கியம் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால், மிருக வைத்தியருடன் கலந்தாலோசிக்கவும் அல்லது Department of Environment, Land, Water and Planning Customer Service Centre வாடிக்கையாளர் மையத்தை 136 186 என்ற இலக்கத்தில் தொடர்புகொள்ளவும்.

## எனது மழைத்தண்ணீர்த் தாங்கியில் உள்ள தண்ணீரைக் குடிக்கலாமா?

உங்கள் மழைத்தண்ணீர்த் தொட்டித் தண்ணீரின் சுவை, தோற்றம் அல்லது மணம் வழக்கத்திற்கு மாறானதாக இருந்தால், அதைக் குடிக்கவோ, குளிக்கவோ அல்லது செல்லப் பிராணிகளுக்கோ உபயோகிக்க வேண்டாம்.

மேலதிக தகவலுக்கு, உங்கள் உள்ளூர் கவுன்சில் அல்லது Department of Health and Human Services அலுவலகத்தில் உள்ள சுற்றாடல் ஆரோக்கிய உத்தியோகத்தரைத் தொடர்புகொள்ளவும்.

## நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்படும் நெருப்பிலிருந்து வரும் சாம்பலால் என்னுடைய தோட்டத்திலுள்ள தாவரங்கள் பாதிக்கப்படுமா?

பொதுவாக, தோட்டத்திற்கு சாம்பல் நல்லதாக இருந்தாலும் கூட ஒரு அடர்த்தியான சாம்பல் கட்டமைப்பானது தாவரங்களைப் புகைச்சூழச் செய்யலாம் மேலும் அதன் வளர்ச்சி மற்றும் வாழ்நாள் குறையலாம்.

## என்னுடைய தோட்டத்தில் உள்ள மரக்கறிகள், பழங்கள் அல்லது மூலிகைச்செடிகளில் சாம்பல் இருந்தால் அதைச் சாப்பிடலாமா?

உணவு சாப்பிடப் பாதுகாப்பானதா என்பதைத் தீர்மானிக்க எப்போதும் பொது அறிவைப் பயன்படுத்தவும். சாப்பிடுதல் அல்லது சமைத்தலுக்கு முன்பாக மரக்கறிகள், பழங்கள் அல்லது மூலிகைச்செடிகளை நன்றாகச் சுத்தம் செய்திருக்க வேண்டும்.

உங்கள் விளைப்பொருளை நீங்கள் சாப்பிட விரும்பவில்லையென்றால், பாதிக்கப்பட்ட தாவரம் வீணாகிவிடலாம் மற்றும் மக்கிவிடலாம்.

## என்னுடைய வீட்டில் புகையின் வாசம் வருகிறது. நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களுடைய வீடு புகையால் வாசம் வந்திருந்தால், நெருப்பு அணைந்த பிறகு:

- சூரிய ஒளி மற்றும் நல்ல காற்று வரும் அளவிற்குக் கதவைத் திறந்து வைக்கவும்
- மென்மையான பொருட்களை சூரிய ஒளியில் காற்றுப் படவிடவும்
- உள்ளிட மேற்பரப்புகளைத் தண்ணீர் ஊற்றித் துடையுங்கள். சாம்பல் கண்ணுக்குத் தெரிந்தால், சவர்க்காரம் மற்றும் தண்ணீரைக் கொண்டு துடைக்கவும்.

## ஆடையைத் திறந்த வெளியில் விடுவது பற்றி?

புகைசூழ்ந்த நிலைகளின் போது ஆடை வெளியிருந்தால், புகை வாசனையை நீக்க அவற்றை மீண்டும் சுத்தம் செய்யவும், மேலும் சாம்பல் உணர்ச்சியான சருமத்தை எரிச்சலூட்டவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. இன்னமும் புகை இருந்தால், ஆடைகளை உள்ளிடங்களில் அல்லது டிரையரில் உலர விடுங்கள்.

## மேலதிக தகவல்

### Vic Emergency

பிரத்தியேகமான சம்பவங்கள் அல்லது அவசரநிலைகள் பற்றிய மேலதிக தகவலுக்கு, பின்வரும் இணையத்தைப் பாருங்கள்: www.emergency.vic.gov.au

### உள்ளூர் அவசரநிலை வானொலி நிலையம்

பிரத்தியேகமான சம்பவங்கள் மற்றும் அவசரநிலைகள் பற்றிய தற்போதைய தகவலுக்கு, உங்களுடைய உள்ளூர் அவசரநிலை வானொலி நிலையத்தைக் கேளுங்கள்.

### NURSE-ON-CALL

வாரத்தின் அனைத்து நாட்களும், நாள் முழுவதும் இயங்கும் பதிவுசெய்துள்ள தாதியிடமிருந்து உடனடி உடல்நல ஆலோசனையைப் பெறுவதற்கு, 1300 60 60 24 என்ற இலக்கத்தை அழைக்கவும்.

**Department of Health and Human Services**

பழுப்பு நிலக்கரி நெருப்பிலிருந்து வரும் புகை அல்லது சாம்பலின் உடல்நல விளைவுகள் அல்லது மழைத்தண்ணீர்த் தாங்கியிலுள்ள தண்ணீரின் தரம் குறித்த மேலதிக தகவலுக்கு, அலுவலக நேரங்களில் 1300 761 874 என்ற இலக்கத்தை அழைக்கவும்.

**Environment Protection Authority விக்ரோறியா**

சுற்றாடலிலுள்ள காற்றின் தரம், சூழலில் இந்தத் தீயின் ஏனைய தாக்கங்கள் அல்லது பழுப்பு நிலக்கரிச் சுரங்க நெருப்பிலிருந்து வரும் சாம்பலை கொண்டுசென்று, அகற்றுதல் பற்றிய தகவலை 1300 372 842 என்ற இலக்கத்தில் EPA Victoria-இடமிருந்து பெறலாம்.

## உள்ளூர் அரசாங்கம்

சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் குறித்த அறிவித்தல்கள் அல்லது மழைத்தண்ணீர்த் தாங்கியிலுள்ள தண்ணீரின் தரம் பற்றிய ஆலோசனைக்கு உங்களுடைய உள்ளூர் கவுன்சிலைத் தொடர்புகொள்ளுங்கள்.

அணுகக்கூடிய வடிவமைப்பில் இந்த வெளியீட்டைப் பெறுவதற்கு, 1300 761 874 என்ற இலக்கத்தை அழைக்கவும், தேவைப்பட்டால் National Relay Service 13 36 77-ஐ உபயோகிக்கவும் அல்லது environmental.healthunit@dhhs.vic.gov.au என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்

அங்கீகரித்து, வெளியிட்டவர்: விக்ரோறிய அரசாங்கம், 1 Treasury Place, Melbourne.

© விக்ரோறிய மாநிலம், Department of Health and Human Services நவம்பர் 2016.